பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
18 01 2026 SUNDAY 7 15 PM
ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு வளர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. அரசியல் சாசனத்திற்கு எதிராக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க தேசிய மாணவர் படையினர் பாடுபட வேண்டும் என்று பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பாகிஸ்தானின் வணிக வளாகத்தில் நேரிட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

5. நியூஸிலாந்துக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 338 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<<

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு வளர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

மேற்குவங்க மாநிலம், Singur-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இம்மாநிலத்தில் உள்ள விவசாயிகள், மகளிர் மற்றும் இளையோர் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், இதனை முழுமையாக செயல்படுத்துவதற்கு திரிணாமுல் காங்கிரஸ் அரசு தடையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்குவங்கத்தில் பிஜேபிக்கான ஆதரவு அதிகரித்து வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>>><<<<<<

அரசியல் சாசனத்திற்கு எதிராக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசியல் சாசனத்தை பாதுகாக்க வேண்டியது அனைவரது கடமை என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் வகையில் திரிணாமுல் காங்கிரஸ் அரசு செயல்படுவதாகவும் அவர் குறை கூறினார்.

சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களின் நலன்களை பாதுகாப்பதற்கு திரிணாமுல் காங்கிரஸ் கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கும், பல்லுயிர் பெருக்கத்திற்கும் மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், ஒடிசா மாநிலத்தில் உள்ள *Debrigarh* வனவிலங்கு சரணாலயத்தில்

காட்டெருமைகளின் எண்ணிக்கை 28 சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ்-விற்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

விளையாட்டு துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் Raisen-ல் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை பட்டியலிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விளையாட்டு திருவிழாக்கள் நாடுமுழுவதும் நடத்தப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் ஒரு பகுதியாக, Silvani சட்டப்பேரவை தொகுதியில் நடைபெற்ற விளையாட்டுத் திருவிழா இன்று நிறைவடைந்திருப்பதாக அவர் கூறினார்.

14 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சைக்கிள் பயிற்சி மேற்கொள்வது சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் உதவிடும் என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

ஞாயிறு தோறும் சைக்கிள் பயிற்சி இயக்கத்தின் ஒரு பகுதியாக, இன்று குஜராத்தில் சைக்கிள் பயணம் மேற்கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

Gondal-ல் நடைபெற்ற இந்த சைக்கிள் பயணத்தில் 250-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக அவர் தெரிவித்தார்.

அனைத்து வயதினரும் உடலை சீராக பராமரிப்பதற்கு சைக்கிள் பயிற்சி உதவிடும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் நடைபெற்ற இயக்கத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

ஹைதராபாதில் நடைபெற்ற சைக்கிள் பயண இயக்கத்தில் மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கலந்து கொண்டார்.

>>>>>><<<<<<

நாடு முழுவதும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 7 ஆயிரத்து 900 கிலோமீட்டர் ரயில் வழித் தடங்கள் புனரமைக்கப்படவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டில், 7 ஆயிரத்து 500 கிலோமீட்டர் தொலைவிற்கான பணிகள் நடைபெற்று வருவதாக ரயில்வே செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த நிதியாண்டில், 6 ஆயிரத்து 800 கிலோ மீட்டர் தொலைவு ரயில் வழித்தடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பிஜேபி தேசிய தலைவர் பதவிக்கான தேர்தலுக்கு நாளை பிற்பகல் 2 மணி தொடங்கி 4 மணிவரை வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இதன்பின்னர், 4 மணி தொடங்கி 5 மணி வரை மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும் என்றும், மனுக்களை விலக்கிக் கொள்ள மாலை 6 மணிவரை

காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அக்கட்சியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

போட்டி இருக்கும்பட்சத்தில் நாளை மறுநாள் தேர்தல் நடைபெறும்.

>>>>>><<<<<<

குடியரசு தின அணிவகுப்பிற்கான அழைப்பிதழில், வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த கைவினை கலைஞர்களின் திறனை எடுத்துரைக்கும் வகையிலான அம்சங்கள் இடம்பெற்றுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், அழைப்பிதழ் தொடர்பான காணொலியையும் பகிர்ந்துள்ளார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க தேசிய மாணவர் படையினர் பாடுபட வேண்டும் என்று பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் கேட்டுக் கொண்டுள்ளார்.

குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்கவுள்ள தேசிய மாணவர் படையினருடன், இன்று புதுதில்லியில் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இளையோருக்கு ஒழுக்கம் மற்றும் நன்னெறிகளை இதுபோன்ற முகாம்கள் பயிற்றுவிப்பதாக அவர் தெரிவித்தார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு தேசிய மாணவர் படையினர் ஊக்கமளிக்க வேண்டும் என்றும் திரு. சஞ்சய் சேத் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

உலக பொருளாதார அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் டாவோஸ் புறப்பட்டுச் சென்றார்.

இந்தக் கூட்டத்தில், மஹாராஷ்ட்ராவில் முதலீடு செய்ய முன்வருமாறு தொழில் நிறுவனங்களுக்கு முதலமைச்சர் அழைப்பு விடுக்கவிருப்பதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

மத்தியப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர், 11 பேர் காயமடைந்தனர்.

சாலை மேம்பாட்டுப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, வேகமாக சென்ற கார் அவர்கள் மீது மோதியதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

பாகிஸ்தானில் வணிக வளாகம் ஒன்றில் நேரிட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

கராச்சியில் உள்ள வணிக வளாகத்தில் இந்த தீ விபத்து நேரிட்டதாகவும், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

சீனாவில் எஃகு தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் பலர் காயமடைந்தனர்.

Baotao நகர் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் இந்த விபத்து நேரிட்டதாகவும், 5 பேரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>>><<<<<<

*நியூஸிலாந்துக்கு எதிரான 3-வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 338 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 14 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 78 ரன் எடுத்துள்ளது.*

*இந்தூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.*

*இதனையடுத்து பேட் செய்த நியூஸிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 337 ரன் எடுத்தது.*

*Daryl Mitchell 137 ரன்னும், Glenn Phillips 106 ரன்னும் குவித்தனர்.*

>>>>>>><<<<<<

*ஆஸ்திரேலியா மகளிர் அணிக்கு எதிரான 3 டிவென்டி டிவென்டி மற்றும் 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*ஹர்மன் ப்ரீத் கவுர் தலைமையிலான இந்த அணியில், Shafali Verma, Renuka Singh Thakur உட்பட 16 பேர் இடம் பெற்றுள்ளனர்.*

>>>>>>><<<<<<

*ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச Junior டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் – ஆஸ்திரேலியாவின் Alame இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை, ஹாங்காங்கின் Cabia – தென்னாப்பிரிக்காவின் Van Zyl இணையை வென்றது.*

>>>>>>><<<<<<

*எகிப்து பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 5 தங்கம், 5 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.*

ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் Sukant Kadam, Pramod Bhagat தங்கப்பதக்கத்தையும், சூர்யகாந்த் யாதவ், உமேஷ் விக்ரம் குமார், Jatin Azad ஆகியோர் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் துளசிமதி முருகேசன், Alphia James ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் துளசிமதி முருகேசன் – Nitesh Kumar இணை தங்கப்பதக்கத்தையும், Ruthick Ragupathi – Manasi Joshi இணை வெள்ளிப்பதக்கத்தையும் வென்றன.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Kantharajan Ravi Naik – Santosh Govindan இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

ஃபிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச வில்வித்தைப் போட்டியில், இந்தியா 2 தங்கப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் 21 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் கணேஷ் திருமுருவும், 18 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Sarvesh Smaran-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

>>>>>><<<<<<

ஸ்வீடன் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Rujula Ramu பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-14, 21-14 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Yuan Chi Liao-வை வென்றார்.

>>>>>><<<<<<

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் முதல் சுற்றில், இந்தியாவின் அர்ஜுன் எரிகைஸி - பிரக்ஞானந்தாவை வென்றார்.

>>>>>>END<<<<<<<